தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 2-7-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஆடிப் பட்டப் பயிர்களுக்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாட்டில் மானாவாரிப் பயிர்களுக்கு ஆடிப் பட்டம் முக்கியமானதாகும். தென்மேற்குப் பருவமழை இப்பட்டத்தின் உற்பத்தியை தீர்மானிக்கிறது. இவ்வருடம் பருவமழை இயல்புக்கு குறைவாக இருக்கும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. தானியப் பயிர்கள், எண்ணெய் வித்துப் பயிர்கள் மற்றும் காய்கறிகள் இப்பட்டத்தில் பயிரிடப்படும் முக்கியப் பயிர்களாகும். வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகமானது மக்காச்சோளம், சோளம், எள், நிலக்கடலை மற்றும் சின்ன வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு கீழ்கண்ட விலை முன்னறிவிப்புகளை செய்துள்ளது.

### மக்காச்சோளம்

உலகளவில் 2013-14 ஆம் ஆண்டில் மக்காச்சோள உற்பத்தியானது 177 மில்லியன் ஹெக்டேரிலிருந்து 967 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க வேளாண் துறை (USDA) கணக்கின்படி 2014-15 ஆம் ஆண்டில் மக்காச்சோளத்தின் உற்பத்தி 979 மில்லியன் டன்களாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டைக் காட்டிலும் இது 1.25 சதவீதம் அதிகம் ஆகும். கடந்த ஆண்டைக் காட்டிலும் 2013-14 ஆம் ஆண்டில் உலக அளவிலான மக்காச்சோளத்தின் இருப்பு 7.69 சதவீதமாக அதிகரித்துள்ளது. உலக அளவில் மக்காச்சோளத்தின் இருப்பு மற்றும் உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கும் அமெரிக்காவின் உற்பத்தி அதிகரித்து உள்ளதால் மக்காச்சோளத்தின் விலை குறைந்து வருகின்றது. இந்திய அரசின் விவசாயத்துறையின் கணக்கீட்டின்படி 2014-15 ஆம் ஆண்டில் மக்காச்சோளத்தின் உற்பத்தி 23 மில்லியன் டன்களாக

இருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டைக்காட்டிலும் 2 சதவீதம் அதிகமாகும். இந்தியாவை பொருத்தமட்டில் கர்நாடக மாநிலம் மக்காச்சோள உற்பத்தியில் 18.94 சதவீதம் பங்கு வகித்து முதல் இடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து ஆந்திரப்பிரதேசம் (17.42 சதவீதம்), மகாராஷ்டிரா (10.65 சதவீதம்), இராஜஸ்தான் (7.74 சதவீதம்), தமிழ்நாடு (7.27 சதவீதம்) மற்றும் பீகார் (7.04 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாட்டில், பெரம்பலூர், அரியலூர், கடலூர், திண்டுக்கல் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மக்காச்சோள சாகுபடி செய்யப்படுகிறது. மக்காச்சோளத்தின் தற்போதைய விலை குவிண்டாலுக்கு ரூ.1480 ஆகும். வணிகர்களின் கூற்றுப்படி தமிழகத்தில் விவசாயிகள் விலை உயரும் என்னும் எதிப்பார்ப்பில், தைப்பட்டத்தில் விளைந்த 15,000 டன் மக்காச்சோளத்தை இருப்பு வைத்துள்ளனர். கர்நாடகா அரசு விவசாயிகளிடமிருந்து 7 இலட்சம் டன் மக்காச்சோளத்தை கொள்முதல் செய்துள்ளது. இதை தொடர்ந்து தற்போது இணைய ஒப்பந்தப்புள்ளி கோரும் எண்ணத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் பீகாரிலிருந்து குவிண்டாலுக்கு ரூ.1400 என்ற விலையில் அதிக வரத்து வந்து கொண்டிருப்பதால் விலை உயர வாய்ப்பின்றி தற்போதைய விலையே நிலவும் என்று கருதப்படுகிறது.

இம்மையம் கடந்த 20 ஆண்டுகளாக உடுமலைப் பேட்டை சந்தையில் நிலவிய விலை நிலவரத்தை ஆய்வு செய்தது. மேலும் வர்த்தகர்களிடமும் ஆய்வு நடத்தியது. பொருளாதார மற்றும் வர்த்தகர் ஆய்வின்படி ஜுன் மாதம் மக்காச்சோளத்தின் விலை குவிண்டாலுக்கு ரூ.1480 ஆகவும், பின் அறுவடை காலமான நவம்பர் மாதத்தில் அதன் விலை குவிண்டாலுக்கு ரூ.1400 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் மக்காச்சோளம் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

## சோளம்

இந்தியாவில், சோளம் பயிரிடும் பரப்பு 1961 முதல் 2011 வரை 18.2 மில்லியன் எக்டரிலிருந்து 6.3 மில்லியன் எக்டராக குறைந்துள்ளது. மேலும் இதன் உற்பத்தி 8 மில்லியன் டன்களிலிருந்து 6 மில்லியன் டன்களாக (65 சதவீதம்) குறைந்துள்ளது. ஆனால் உற்பத்தி திறன் எக்டருக்கு 440 கிலோவிலிருந்து 961 கிலோவாக உயர்ந்துள்ளது. இந்தியாவில், சோளம் 2013-14 மூன்றாவது முன்மதிப்பீட்டின்படி, 6.32 மில்லியன் எக்டேரில் பயிரிடப்பட்டு 5.25 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. 2012-13ல் மொத்த சோளம் பயிரிடும் பரப்பில் ஐம்பது சதவீதம் மகாராஷ்டிரா மாநிலம் (3.26 மில்லியன் எக்டர்)

பங்களிக்கிறது. கர்நாடகா (1.14 மில்லியன் எக்டர்), ராஜஸ்தான் (0.55 மில்லியன் எக்டர்), மத்தியப்பிரதேசம் (0.36 மில்லியன் எக்டர்) மற்றும் தமிழ்நாடு (0.20 மில்லியன் எக்டர்)ஆகியவை சோளம் பயிரிடும் பிற முக்கிய மாநிலங்களாகும்.

தமிழ்நாட்டில் சோளம், தானியம் மற்றும் தீவனப்பயிராக பயிர்செய்யப்படுகிறது. 2012-13ல் திண்டுக்கல் (29.15 ஆயிரம் எக்டர்), திருச்சிராப்பள்ளி (25.05 ஆயிரம் எக்டர்), கோயமுத்தூர் (23.11 ஆயிரம் எக்டர்), சேலம் (17.9 ஆயிரம் எக்டர்), கரூர் (16.05 ஆயிரம் எக்டர்) மற்றும் திருப்பூர் (11.97 ஆயிரம் எக்டர்) ஆகியவை சோளம் பயிரிடும் முக்கிய மாவட்டங்களாகும். இவை தமிழ்நாட்டில் மொத்த சோள உற்பத்தியில் 76 சதவீதம் பங்களிக்கின்றன. தமிழ்நாடு பாரம்பரிய விதைகளின் களஞ்சியமாக உள்ளது. திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் பாரம்பரிய விதை வகைகளாக மஞ்சள் சோளம், வெள்ளைச் சோளம், கரிச் சோளம், காரடிச் சோளம் ஆகியவையும், ரகங்களாக CO30, BSR1 மற்றும் CSH5 ஆகியவையும் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில், சோளம் கரிப் (ஜூலை – அக்டோபர்), ரஃபி (அக்டோபர்-பிப்ரவரி) மற்றும் கோடை காலங்களில் பயிரிடப்படுகிறது. சோளத்தின் குறைந்த தேவை மற்றும் விலை குறைவினால் கடந்த பத்து ஆண்டுகளாக சோளம் பயிரிடும் பரப்பானது 383 ஆயிரம் எக்டரிலிருந்து 198 ஆயிரம் எக்டராக (48 சதவீதம்) குறைந்துள்ளது.

இம்மையம் திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நிலவிய சோளத்தின் விலைகளை ஆராய்ந்தது. சோளத்தின் தற்போதைய விலை கிலோவிற்கு ரூ.18.5 முதல் ரூ.19 வரை உள்ளது. சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில் அறுவடையின் போது (செப்டம்பர் - அக்டோபர், 2014) கிலோவிற்கு ரூ.18-19 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் ஆடிப்பட்ட சோளம் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

### எள்

இந்தியாவில் எள் ஒரு முக்கிய எண்ணெய் வித்துப் பயிராகும் மற்றும் தமிழ்நாட்டில் ஆடிப்பட்டத்தில் பயிரிடப்படுகிறது. மேலும் இதன் உற்பத்தி பருவநிலையைப் பொருத்துள்ளது. உலகளவில் 2011-12 ஆம் ஆண்டு எள் பயிரிடப்பட்ட பரப்பு 78.97 இலட்சம் எக்டர் மற்றும் இதன் உற்பத்தி 40.36 இலட்சம் டன்களாகும். இந்தியா, மியான்மர், சூடான், தான்சானியா, சீனா, நைஜீரியா, உகாண்டா மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகள் உலகின் மொத்த எள் பரப்பளவில் 79 சதவீதமும் மற்றும் உற்பத்தியில் 77 சதவீதம் பங்களிக்கின்றன. இந்தியாவில் 2012-13 ம் ஆண்டு கரீப் பருவத்தில் எள் உற்பத்தி 3.40 இலட்சம் டன்களாகும். இது 2013-14ல் சுமார் 3.50 இலட்சம் டன்களாகும்.

உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், ஒரிசா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் மொத்த உற்பத்தியில் 86 சதவீதம் பங்கு வகிக்கின்றன. இந்தியாவில் உத்திரப்பிரதேசம் 1.20 இலட்சம் டன்கள் எள் உற்பத்தி செய்து முதலிடம் வகிக்கிறது.

தமிழ்நாட்டில் 2011-12ம் ஆண்டு எள் 0.43 இலட்சம் எக்டர் பரப்பளவு பயிரிடப்பட்டு 0.26 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஈரோடு, கரூர், சேலம், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருப்பூர், புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகியன எள் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். கொல்கத்தா, குஜராத், ஆந்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து வியாபாரிகள் எள்ளைக் கொள்முதல் செய்கின்றனர். தமிழ்நாட்டில் பொதுவாக எள் பயிர் இரண்டு பருவங்களில் பயிரிடப்படுகிறது. தைப்பட்டம் (ஜனவரி – பிப்ரவரி) மற்றும் ஆடிப்பட்டம் (ஜூலை –ஆகஸ்ட்) ஆகிய மாதங்களில் பயிரிடப்படுகிறது. பொதுவாக ஜூலை – ஆகஸ்டில் விதைக்கப்படும் எள் அக்டோபர் முதல் டிசம்பர் வரை சந்தைக்கு வருகிறது. மேலும் தைப்பட்டத்தில் விதைக்கப்படும் எள் மார்ச்- ஏப்ரல் ஆகிய மாதங்களில் சந்தைக்கு வருகிறது. இம்மையம் சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 14 வருடங்கள் நிலவிய சிவப்பு எள் விலைகளை ஆராய்ந்தது. ஆய்வு முடிவுகளின்படி எள் அறுவடை செய்யப்படும் அக்டோபர் முதல் நவம்பர் மாதங்களில் ஒரு குவிண்டாலுக்கு ரூ.8500 முதல் ரூ.8700 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த விலை முன்னறிவிப்பின் அடிப்படையில் விவசாயிகள் எள் சாகுபடி முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைச் செய்யப்படுகின்றனர்.

## நிலக்கடலை

உலகளவில் நிலக்கடலை ஒரு முக்கிய எண்ணெய்வித்துப் பயிராகும். சோயா, பனை எண்ணெய், சூரியகாந்தி, கடுகு போன்ற எண்ணெய் வித்துக்கள், நிலக்கடலை வித்துக்கள் மற்றும் எண்ணெய் விலைகளை பாதிக்கிறது. உலகளவில் 2013-14ம் ஆண்டில் மொத்த நிலக்கடலை உற்பத்தி 39.88 மில்லியன் டன்களாகவும், 2012-13ல் 37.19 மில்லியன் டன்களாகவும் இருந்தது. இந்தியாவில் 2012-13 ம் ஆண்டு கரீப் பருவத்தில் நிலைக்கடலை உற்பத்தி 26.20 இலட்சம் டன்களாகவும், 2013-14ல் சுமார் 47.15 இலட்சம் டன்களாகவும் இருந்தது. குஜராத், ஆந்திரப்பிரதேசம், இராஜஸ்தான், கர்நாடாக, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம் மற்றும் ஒரிசா ஆகியன நிலைக்கடலை உற்பத்தியில் முக்கிய மாநிலங்களாகும். அமெரிக்கா வேளாண் துறை தகவலின்படி, இந்தியாவில் 2013-14ல் மொத்த சமையல் எண்ணெய் இறக்குமதி 11.8 மில்லியன் டன்களாக இருக்கும் என்றும் இது கடந்த ஆண்டில் 10.7 மில்லியன் டன்கள் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய எண்ணெய் ஆண்டு (அக்டோபர், 2013 -நவம்பர், 2014) கணக்கின்படி உணவு எண்ணெயின் நுகர்வு பங்கில் இறக்குமதி கடந்த ஆண்டு 61.2 சதவீதம் என்ற அளவில் இருந்து இவ்வாண்டு 65.3 சதவீதம் உயர்ந்துள்ளது.

2011-12ல் தமிழ்நாட்டில் நிலக்கடலை பயிரிடப்படும் பரப்பளவு 3.85 இலட்சம் எக்டர் ஆக இருந்தது. திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் புதுக்கோட்டை ஆகியன நிலக்கடலை பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். ஆடிப்பட்டத்தில் மானாவாரி நிலக்கடலை 65 சதவீதம் பயிரிடப்படுகிறது. TVM 7, VRI 2, VRI Gn5, VRI Gn6, TMV Gn13 முதலியவை தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய நிலக்கடலை இரகங்கள் ஆகும். இம்மையம் சேவூர் மற்றும் திண்டிவனம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் கடந்த 14 ஆண்டுகளாக நிலவிய நிலக்கடலை விலைகளை ஆராய்ந்தது. ஆய்வு முடிவுகளின்படி திருப்பூர், கோவை ஆகிய மாவட்டங்களில் அக்டோபர்-நவம்பர் மாதத்தில் அறுவடையின்போது நிலக்கடலை காய்க்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ.4200 முதல் ரூ.4300 வரை கிடைக்கும். திண்டிவனம் சந்தை பகுதியில் நிலக்கடலை விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ.3500 முதல் 3600 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த விலைகளின் அடிப்படையில் விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### சின்ன வெங்காயம்

சின்ன வெங்காயம் இலாபம் தரும் முக்கிய பயிர்களில் ஒன்றாக கருதப்படுவதால் ஆண்டு முழுவதும் பயிரிடப்படுகிறது. மத்திய அரசின் தேசிய தோட்டக்கலை வாரியத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டின்படி, 2013-14ல் தமிழ்நாட்டில் வெங்காய சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 0.39 இலட்சம் எக்டர் மற்றும் 4.72 இலட்சம் டன்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இது கடந்தாண்டைக் காட்டிலும் வெங்காய சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 9.09 சதவீதம் மற்றும் 5.68 சதவீதம் அதிகரித்துள்ளது. தமிழ்நாடு, இந்தியாவின் மொத்த வெங்காய சாகுபடி பரப்பில் 5 சதவீத பங்களிப்பும், சின்ன வெங்காய சாகுபடி பரப்பில் 70 சதவீதமும் உள்ளது.

கடந்த ஆண்டு (செம்டம்பர் - நவம்பர், 2013) சின்ன வெங்காயம் கிலோவிற்கு ரூ.45 முதல் ரூ.80 வரை விற்கப்பட்டது. ஆனால் தற்போது தரமான சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.22 வரை விற்கப்படுகிறது. இவ்விலை சரிவிற்கான காரணம், கடந்த ஆண்டில் நிலவிய அதிகபட்ச விலையினால் விவசாயிகள் சின்ன வெங்காய சாகுபடி பரப்பை அதிகரித்துள்ளனர். மேலும் இந்தாண்டு ஏற்றுமதியும் குறைவாகவே உள்ளது.

தற்போது தேனி, திண்டுக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்களிலிருந்து வரத்து உள்ளது. மேலும், கர்நாடகாவிலிருந்து துவங்கியுள்ள வரத்து செம்டம்பர் மாதம் வரை நீடிக்கும். எனவே அறுவடை காலமான செம்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் பண்டிகை மற்றும் தேவை அதிகரிப்பால் சின்ன வெங்காய விலை உயர வாய்ப்புள்ளது. தமிழ்நாட்டில் கோ5 இரகத்தின் விட்டம் 27 மில்லி மீட்டருக்கு மேலேயும், வட்ட வடிவத்துடனும் மற்றும் இளஞ்சிவப்பு முதல் சிவப்பு நிறத்துடனும் உள்ளதால் இதற்கு நல்ல விலை கிடைப்பதற்கான வாய்பபுகள் அதிகம். ஆய்வு முடிவுகளின்படி ஆடிப்பட்டத்தில் நடவு செய்தால் சின்ன வெங்காயத்திற்கு அறுவடை சமயத்தில் அதாவது செம்டம்பர் முதல் அக்டோபர் மாதம் வரை, கிலோ ஒன்றுக்கு ரூ.22 முதல் ரூ.25 வரை விலை கிடைக்கும என கணிக்கப்பட்டுள்ளது. இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் சின்ன வெங்காய விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி: 0422-2431405.

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

1. பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறு தானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி: 0422-2450507

2. பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி: 0422-2450812

3. பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641 003,
தொலைபேசி எண் - 0422-6611374, 0422-6611283

மக்கள் தொடர்பு அலுவலர்